[1995 ஏப்ரல் 10

291—

மணல் எடுக்க தனியாருக்கு உரிமம்

*9369—**திரு பி. சொக்கலிங்கம்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதியில் மணப்பாக்கம் என்னும் இடத்தில் தனியாருக்கு மணல் எடுக்க உரிமம் வழங்கப்பட்டுள்ளதை அரசு ரத்து செய்யுமா?

(ஆ) மணல் எடுக்கும் உரிமத்தைக் கூட்டுறவுத் தொழில் சங்கங்களுக்கு அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம், செங்கற்பட்டு வட்டம், மணப்பாக்கம் கிராமத்தில் பாலாற்றில் மணல் எடுக்க திரு. சீனிவாசன் என்பவருக்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் 16-3-1994 நாளிட்ட ஆணைப்படி 3 ஆண்டுகளுக்கு உரிமம் புதுப்பிக்கப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவரால் வழங்கப்பட்ட அந்த உரிமையை ரத்து செய்யும் உத்தேசம் ஏதுமில்லை.

(ஆ) தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் இலங்கை அகதிகள் ஆகியோருக்கு முன்னுரிமை கொடுத்து கல் மற்றும் மணல் குவாரிகள் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் இப்படிப்பட்ட குவாரிகள் பெரும்பாலானவை போலியானவை என்பது அரசுக்குத் தெரியவந்ததால், இவர்களுக்குக் கொடுக்கப்பட்ட முன்னுரிமையை ரத்து செய்து 16-6-1994 நாளிட்ட தொழில் துறை அரசாணை எண் 166-ன்படி சிறு கனிம சலுகை விதிகளுக்கு திருத்தங்கள் வெளியிடப்பட்டன. எனவே தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் மணல் குவாரிகள் குத்தகைக்கு வழங்க இயலாது.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு பகுதியில் உள்ள மணப்பாக்கம் பகுதி மட்டுமல்ல, பல்வேறு பகுதிகளில் அரசு அனுமதி கொடுத்த ஒரு பகுதி

1995 ஏப்ரல் 10]

இருந்தாலும், அரசு அனுமதி கொடுக்காத சில பகுதிகளிலும் மணல் எடுக்கிறார்கள். அப்படி மணல் எடுக்கின்ற லாரி உரிமையாளர்கள்மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்று நான் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ. து வரதராஜன்.

திரு. செ.து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் 1992லே சீனிவாசன் என்பவருக்கு அனுமதி தந்ததாகச் சொல்கிறார்கள். ஆனால் சீனிவாசன் அவர்கள் 1992க்கு முன்பே 3 ஆண்டுக்காலம் அந்த லீசை எடுத்து, அதை ரென்யுவல் செய்து கொண்டிருக்கிறார். சுமார் 6 ஆண்டுக்காலமாக அந்தத் தனியார் அந்தக் குவாரியை நடத்திக்கொண்டிருக்கிறார். அவர், அவர் மகன் பெயரில், மனைவி பெயரில், மகள் பெயரில், குமாஸ்தாக்கள் பெயரில்—இப்படி 6 நபர்கள் பெயரிலே அந்த மணல் குவாரியை நடத்தி, ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மதுராந்தகத்தைச் சேர்ந்த மாமண்டூரிலே எடுக்க லைசன்ஸ் பெறப்பட்டது. ஆனால் செங்கல்பட்டு தொகுதியில் இருக்கிற மணப்பாக்கத்தில் வந்து அனுமதியில்லாமல் மணலை எடுத்துக்கொண்டிருக்கிறார். அது மட்டுமல்ல, அரசு சட்டதிட்டங்களுக்கு மாறாக அவர் நடந்துக் கொண்டிருக்கிறபடியால், அவர்மீது நடவடிக்கை எடுத்து, அவர் பெற்றுள்ள அனுமதியை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம் மணப்பாக்கம், புல எண். 262/1ல் சுமார் 303.68 ஏக்கர் பரப்புள்ள பாலாற்றுப் புறம்போக்கில் உள்ள மணலைக் குவாரி செய்ய, 1-7-1987 முதல் 30-6-1990 முடிய மூன்றாண்டுக் காலத்திற்கு திரு. சீனிவாசன் என்பவருக்கு அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் உரிமம் வழங்கியிருந்தார். அந்த உரிமத்தை மேலும் மூன்றாண்டுகளுக்கு புதுப்பிக்குமாறு திரு. சீனிவாசன் செய்த மனுவை, மாவட்ட ஆட்சித் தலைவர் 30-6-1990ஆம் நாளிட்ட ஆணைப்படி தள்ளுபடி செய்தார். திரு. சீனிவாசன் செய்த மேல் முறையீட்டு

TRUTH ALONE TRIUMPHS

மனுவும், கனிமம் மற்றும் சுரங்கத்துறை இயக்குநரால் 26-7-1990ல் தள்ளுபடி செய்யப்பட்டது. திரு. சீனிவாசன் செய்த மறுபரிசீலனை (செகண்ட் அப்பீல்) மனுவை அரசு ஆய்வு செய்து, திரு. சீனிவாசன் உரிமம் புதுப்பிக்கக் கோரும் விண்ணப்பத்தை மீண்டும் பரிசீலித்து ஆணை வழங்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அரசு ஆணை எண். 3-டி எண். 6, நாள் 19-2-1993ல் அறிவுரை வழங்கப்பட்டது. அதன்படி அவருக்கு 1997ஆம் ஆண்டுவரை அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அவருக்கு அனுமதி வழங்கப்பட்ட பகுதிக்கு அப்பாற்பட்டோ அல்லது சட்டத்தின் விதிகளுக்கு முரணாகவோ அவர் மணல் எடுத்தால் அவர்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ம. தனபால்.

திரு. ம. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீனிவாசன் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட சர்வே நம்பருக்கு அப்பாற்பட்டு பல்வேறு பகுதிகளில் மணல் எடுத்து, கோடிக்கணக்கான ரூபாயை இன்றைக்கு சம்பாதித்துக் கொண்டிருக்கிறார். அதனால் அரசுக்குப் பெரும் இழப்பு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே அரசு இதனை ஆய்ந்து எந்தெந்தப் பகுதிகளில் மணல் அதிகமாக இருக்கிறதோ அந்தப் பகுதிகளில் எல்லாம் மணல் ஏலம் விடுவதற்கு, அல்லது விதிமுறைகளுக்கு உட்பட்டு இன்னும் பல்வேறு நபர்களுக்கு குத்தகைக்கு விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா? அதன் மூலம் அரசுக்கு லாபம் ஏற்படும் என்பதால் அரசு இதை பரிசீலனைச் செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிடுகிற அந்த நபருக்கு ஏற்கெனவே அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அந்த அனுமதியை மீறி, சட்டத்திற்குப் புறம்பாக அவர் மணல் எடுக்கிறார் என்று சட்டமன்ற உறுப்பினர்களோ அல்லது பொதுமக்களோ அரசின் கவனத்திற்கோ மாவட்ட ஆட்சித் தலைவரின் கவனத்திற்கோ கொண்டுவந்தால், அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற உரிமம் நிச்சயமாக ரத்து செய்யப்படும். அது மட்டுமல்ல ஏற்கெனவே தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், இலங்கை அகதிகளுக்கு எல்லாம் இந்த மணல் மற்றும் கல் குவாரிகள் கொடுக்கப்பட்டு வந்தன. ஆனால் அவைகளில் பெரும்பாலானவை போலியானவை என்று அரசுக்குத் தெரியவந்ததால், அதை எல்லாம்

1995 ஏப்ரல் 10]

ரத்து செய்துவிட்டு, 1-7-1994 முதல் டெண்டர் முறையில் பொது ஏலத்தில் விடவேண்டுமென்று அரசு விதியைத் திருத்தியிருக்கிறது. இனிமேல் அந்த முறைதான் கையாளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணல் எடுப்பது என்பது பல லட்சக்கணக்கான ரூபாய் வருமானம் தரக்கூடிய வாய்ப்பை உருவாக்கக்கூடிய தொழில். இதைப் பலபேர் பயன்படுத்திக் கொண்டு, ஏலம் எடுத்தாலும் ஏலம் எடுக்காமல் இருந்தாலும் மணல் எடுத்து நிறைய சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படி வருமானம் வரக்கூடிய இந்த வாய்ப்பை, அந்தந்தப் பகுதியில் இருக்கின்ற ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைப்பதன் மூலம் ஊராட்சி ஒன்றியங்களுக்குப் பல லட்சம் ரூபாய் இதிலிருந்து வருமானம் வரும். அதை வைத்துக்கொண்டு அந்த ஊராட்சி ஒன்றியங்கள் அபிவிருத்தித் திட்டங்களைச் செய்ய முடியும். ஆகவே இந்த உரிமத்தை ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒப்படைக்க அமைச்சர் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மணல் மற்றும் கல் குவாரி போன்ற கனிமப் பொருள்கள் மூலம் வருகிற வருமானத்தில் ஒரு பகுதி ஊராட்சிகளுக்காக செலவிடப்படுகிறது. திரு. தம்புசாமி அவர்கள் சொன்னதைப் போல, அந்த உரிமங்களை ஊராட்சிகளுக்குக் கொடுத்துவிட்டால் அவர்களால் அதை சரியாக நிர்வகிக்க முடியாது. ஆகவே இதிலிருந்து வருகிற வருமானத்தின் ஒரு பகுதியை ஊராட்சிகளுக்குக் கொடுக்கின்ற காரணத்தால் மாண்புமிகு உறுப்பினருடைய யோசனையை ஏற்றுக் கொள்வதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. த. ரத்தின்வேல்.

திரு. த. ரத்தினவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஆற்றோரப் பகுதிகளில் மணல் எடுப்பதற்கு ஒரு குறிப்பிட்ட தொகைக்கு டெண்டர் போட்டு, உரிமம் பெற்றதற்குப் பின்னால், ஒன்றிரண்டு மாதங்கள் பணத்தை அரசுக்குச் செலுத்திவிட்டு, அதற்குப் பின்னால், குறிப்பிட்ட தொகையைக் கட்ட இயலவில்லை என்று கூறி நீதிமன்றத்தில் இடைக்காலத் தடை பெற்று, தொடர்ந்து மணல்

எடுப்பதன் மூலம் தனியார் அதிகமாக லாபம் சம்பாதித்து, அரசுக்கு நஷ்டம் ஏற்படுத்துவதை அரசு அறியுமா? இதுகுறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு தெளிவாக அறிந்த பின்புதான் அந்த முறையை மாற்றி இருக்கிறது. காரணம் ஒரு பகுதியில் மணல் குவாரி மூலமாக அதிக வருமானம் வருகிறது என்று சொன்னால் பொது ஏலத்திற்கு வருகிறபோது, ஒப்பன் டெண்டரில் பலபேர் ஒன்று சேர்ந்து கொண்டு, அரசு அலுவலகத்திற்கு வெளியே உட்கார்ந்து கொண்டு, மரத்தடியில் ஒரு கூட்டணி ஏற்படுத்திக் கொண்டு, அரசினுடைய வருமானத்தை இழக்கச் செய்கிற காரணத்தால்தான் அந்த விதியை தளர்த்தி, அரசு என்ன நிர்ணயம் செய்கிறதோ அந்த நிர்ணயத்திற்கு குறையாமல் அந்த மணல் குவாரிகளை அல்லது கல் குவாரிகளை ஏலம் விட வேண்டுமென்று, விதி திருத்தப்பட்டிருக்கிற காரணத்தால் அதுபோன்ற நடைமுறைகள் இப்போது இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு, இது மணப்பாக்கம் பற்றியக் கேள்வி, திருத்தணிக்குப் போகக் கூடாது.

திரு. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் இருக்கக்கூடிய கூவம் ஆற்றில் கூட திருவள்ளூருக்கு அருகாமையில் கள்ளத்தனமாக மணல் எடுத்து வருகிறார்கள். அங்கே வெள்ளப்பெருக்கெடுத்து ஓடியபோது சிறு பாலம் உடைக்கப்பட்டு தற்போது சாலையை அரிக்கக்கூடிய மிகப்பெரிய அபாயம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாலாறைப் பற்றிய கேள்வி. நீங்கள் பாலாறை விட்டுவிட்டு கூவத்திற்குப் போகிறீர்கள். (சிரிப்பு)

திரு. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு: பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தை ஒட்டிய ஒரு கேள்விதான். எனவே திருவள்ளூரிலிருந்து சென்னை வருகிற அந்த நெடுஞ்சாலையை கள்ளத்தனமாக மணல் எடுத்துக் கொண்டிருப்பவர்கள் அரித்து விடுவார்கள் என்ற அபாய நிலை இருக்கிறது. எனவே, அந்தக் கூவத்திலே கள்ளத்தனமாக மணல் எடுக்கிறவர்கள்மீது அரசு உரிய

1995 ஏப்ரல் 10]

நடவடிக்கை எடுத்து, அந்த நெடுஞ்சாலை அபாயத்தை தவிர்க்க அமைச்சர் பெருமகனார் அவர்கள் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்று கள்ளத்தனமாக, சட்டத்திற்கு விரோதமாக மணலோ, அல்லது கல் குவாரிகளோ அல்லது கனிமப் பொருளோ எடுக்கிறபோது அதை மாவட்ட ஆட்சித் தலைவருக்கோ அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கோ அல்லது அமைச்சருக்கோ கவனத்திற்கு கொண்டு வருவது தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய கடமை. ஆகவே, அந்தக் கடமையை திரு. தணிகைபாபு அவர்களும் அவர்களுடைய உற்ற நண்பர் திரு. காஞ்சி பன்னீர்செல்வம் அவர்களும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 292, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

292—

சத்துணவு திட்டத்தில் ஆட்டு இறைச்சி வழங்குதல்

26647*—திருமதி கவிநிலவு தர்மராஜ்:**

மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சத்துணவு திட்டத்தில் குழந்தைகளுக்கு முட்டை வழங்கப்படுவது போல் வாரம் ஒருமுறை ஆட்டு இறைச்சி வழங்கப்படுமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் சத்துணவு வழங்கப்படுகிற மாணவ மாணவியர்க்கு ஆட்டு இறைச்சி வாரத்திற்கு ஒருமுறை வழங்கப்படுமா என்ற கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லையென்று சொல்லிவிட்டார்கள்.